**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 401/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 22nd, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் திப்பணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சுரண்டை, காமராஜர் கல்லூரியில் படித்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா. அ.சா.2 எனது அப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 21.05.2023 ம் தேதி, காலை சுமார் 09.30 மணியளவில் நானும், எனது அப்பாவும்(அ.சா.2) வொரக் ஷாப்-க்கு போனோம். பாவூர்சத்திரம் பாலம் இறக்கத்தில் வொர்க் ஷாப் இருக்கிறது. மலையராமபுரத்தில் உள்ள மளிகைகடையில் எனது சித்தப்பா (அ.சா.1) வீட்டிற்கு தேவையான சாமான்கள் வாங்கிவிட்டு நின்று கொண்டிருந்தார். எதிரி TN-76-AS-4019 என்ற பதிவெண் கொண்ட பிக்அப் வாகனத்தை ஓட்டி வந்து எனது சித்தப்பாவை கொலை செய்யும் நோக்கத்தோடு, இருசக்கரவாகனத்தில் இருந்த எனது சித்தப்பாவை எதிரி தனது வாகனத்தை கொண்டு மோதினார். அதில் எனது சித்தப்பாவிற்கு கால் மற்றும் குறுக்கில் காயம் ஏற்பட்டது. எதிரி மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டார். எனது சித்தப்பாவின் இருசக்கரவாகனமும் சேதம்

அடைந்தது. காயம்பட்ட அ.சா.1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது சித்தப்பா சொந்தமாக இருசக்கரவாகனம் வைத்திருக்கிறாரா? என்று எனக்கு தெரியாது. மலையராமபுரம் ஊரானது, பாவூர்சத்திரம் – கடையம் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டின் அகலம் சுமார் 12 அடி தான் இருக்கும் என்றால் சரிதான். எனது சித்தப்பா ரோட்டிற்கு மேல்புறம் நின்றாரா? அல்லது கீழ்புறம் நின்றாரா? என்றால் என்னால் திசைகளை கூறமுடியாது. நாங்கள் சித்தப்பாவின் அருகில் சம்பவசமயத்தின் போது நிற்கவில்லை. நாங்கள் இருசக்கரவாகனத்தில் அப்போது வந்து கொண்டிருந்தோம். நாங்கள் இருசக்கரவாகனத்தில் தெற்கிலிருந்து வடக்காக வந்து கொண்டிருந்தோம். நாங்கள் வீட்டிலிருந்து கிளம்பும்போது, காலை 09.30 மணியிருக்கும். எங்கள் வீட்டிலிருந்து சம்பவயிடம் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவு இருக்குமா? என்றால் அரை கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். நானும், எனது அப்பாவும் சித்தப்பாவை அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயற்சி எதுவும் எடுக்கவில்லை. 108 ஆம்புலன்ஸிற்கு நான் தகவல் கூறவில்லை. யார் தகவல் கூறினார்கள், என்று எனக்கு தெரியாது. சம்பவயிடத்தில் என்னையும், அப்பாவையும் தவிர 10 பேர்கள் இருந்திருப்பார்கள். எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் தான் எதிரி குடியிருக்கிறார். இந்த சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் சில நாட்களுக்கு முன்பு எதிரியின் அண்ணனை எனது சித்தப்பாவும், அவரது மனைவியும் சேர்ந்து அடித்து காயப்படுத்தியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நான் எனது அப்பாவுடன்

வேலை பார்த்து கொண்டிருந்ததினால், அது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எனது அப்பாவுடன் பாவூர்சத்திரத்திலுள்ள எங்கள் வொர்க் ஷாப்பில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். எங்கள் வொர்க் ஷாப்பிற்கு பக்கத்தில் தான் எனது சித்தப்பா வேலை பார்க்கும் பஜாஜ் கம்பெனி உள்ளது என்றால் சரிதான். எங்கள் வொர்க் ஷாப்பிற்கு பக்கத்தில் தான் எனது தாத்தா முத்து ஆசாரி வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரியை பிடிக்க நானும், எனது அப்பாவும் 200 மீட்டர் ஓடியிருப்போம். அதற்குள் அவர் ஓடி விட்டார். எதிரி வடக்கேயிருந்து தெற்கே ஓடி விட்டார். நானும், எனது அப்பாவும் உடனடியாக பாவூர்சத்திரம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது சித்தப்பாவிற்கு ஊமைக்காயம் இருந்தது. கால் வீங்கியிருந்தது. காயத்திலிருந்து இரத்தம் எதுவும் வரவில்லை. எனது சித்தப்பாவின் ஆடைகள் கிழியவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த 15–20 நிமிடங்களுக்குள் ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்ஸில் நானும், எனது அப்பாவும் உடன் சென்றோம். நான் முதல் விசாரணையில் கூறியவாறு, எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. குற்ற எண்.162/2023 வழக்கினை வாபஸ் பெறக்கோரி, அ.சா.1 எதிரியின் சகோதரரை கட்டாயப்படுத்தி, நெருக்கடி கொடுத்தார் என்றும், எதிரி அந்த வழக்கை வாபஸ் பெறுவதற்கு தடையாக இருந்ததால் முத்து ஆசாரியின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி, அ.சா.1 கொடுத்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

C KATHIRAVAN Digitally signed by C KATHIRAVAN Date: 2025.05.26 12:52:21 +0530